ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

ये शान्तदान्ताः श्रुतिपूर्णकर्णा जितेन्द्रियास्त्रीविषये निवृत्ताः ।
प्रतिगृहे सङ्कुचिताग्रहस्तास्ते ब्राह्मणास्तारयितुं समर्थाः ॥

எவர் பொறுமையையும், அந்தரிந்திரியம், பாஹ்யெந்திரியம் என்றுகூறப்பட்ட இருவகை இந்திரியங்களையும்அடக்கும் திறமையை யுடையவர்களோ, எவர் வேதங்கள், சாஸ்திரங்கள் இவைகளால் நிறம்பிய கர்ணங்களைத்தரிக்கின்றார்களோ, எவர் சாஸ்திரங்களின் கருத்திற்கு விரோதமாயிருக்கும் வியாபாரங்களிலிருந்தும் நிவிருத்தியடைந்திருக்கிறார்களோ, எவர் பிறரால் கொடுக்கப்படும் தானத்தைப் பெறுவதில் வெறுப்படைந்து, அதிகமாய் அபேக்ஷிக்காமலிருக்கின்றார்களோ, அவர்களே பிராமணர்கள். பிறரை சம்ஸாரமென்னும் கடலிலிருந்து, கரையேற்ற அருகராகிறார்கள்.

வேதியர் மிகவும் மகிமை பொருந்திய அந்தணர் வம்சத்தில் அவதரித்த மாத்திரத்தில், தனக்கு நிக்கிரஹானுக்கிரஹ சக்தி யிருக்கிறதென்றும், மற்றவர்களைக் காட்டிலும் நாம் சிறந்தவரென்றும், அகங்காரங் கொள்வதில் சிறிதும் பயனில்லை, என்று நினைத்து பூர்வ ஜன்ம புண்யவசத்தால், உத்தம குலத்தில் ஜனனமேற்பட்டதற்குத் தக்கவாறு பொறுமை, அடக்கம், கசடறக் கற்ற கலைகளின் கருத்திற்கிணங்கிய அனுஷ்டானம், இந்திரியங்களை, அவைகள் செல்லும் வழிகளில் விடாமல் தனக்குச் சுவாதீனமாக வைத்து நடத்தல், எத் தகைய தானமாயினும் வாங்கிப் பொருளை வளர்க்க வேண்டுமென்கிற அவாயின்மை, முதலிய இயற்கையிலிருக்க வேண்டிய நற்குணங்கள் இருக்குமாயின், தான் சிறந்த பதவியை யடைவதோடு, பிறரையும் நற்கதி யடையும்படி செய்ய அருகனாகிறான். என்ற பெரியோர்களின் கருத்திற் கிணங்க அவரவர்கள் தங்களுக்கிருக்க வேண்டிய அவசியமான குணங்களைக் கைவிடாமல் பாதுகாத்துப் பெருமையை அடைவது நலம்.

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி௵ கார்த்திகைமீ ௧௨௨

சரணமடைந்தோரைப் பாதுகாப்பதே

சிறந்த தர்மம்.

धर्मे प्रकथिते चास्मिन् शरणागतरक्षणे ।
इदानीं कथ्यते भागो भारतोक्तः कथात्मकः ॥

இப் புவியில் எப்பொழுதும் தீய வழிகளில் பிரவேசிப்பவனும், பாபமே இவ் வுருவாய்த் தோன்றியுளதோ வெனப் பார்ப்போருக்கு பயத்தை விளைவிக்கும் காலகூட மெனும் பயங்கரமான விஷம் போல் கருத்த மேனியுடனும், அற்ப இடையையும், குறுகிய கழுத்தையும், சிறு பாதங்களையும், அடைந்து பறவைகளின் வதத்தையே விருத்தியாகக் கொண்ட பாபாத்மாவான வோர் வேடனிருந்தான். அவன் எப்பொழுதும் பாப கர்மாவையே அனுஷ்டித்தபடியால் பந்துக்களும், மித்திரர்களும் அவனுடன் சம்பாஷணை முதலியவைகளை விலக்கி விட்டார்கள், எவர் எவ்விதமிருப்பினும், அதைப் பொருட்டாகக் கருதாத அவ்வேடன் ஒவ்வொருதினமும், காட்டிற்குச்சென்றுபக்ஷிகளைக் கொன்று, அவைகளை விற்றுக் கிடைக்கும் பொருளால் குடும்பத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொண்டு, இப்பாவத் தொழிலை விடாமல் பார்யை, புத்திரன் முதலானவர்களுடன் நீடூழிகாலம் வாழ்ந்து வந்தான். ஒரு சமயம் பக்ஷிகளைப் பிடிக்கவேண்டி, அவ் வேடன் கானகத்திலிருக்குங்கால், திடீரென ஆகாயத்தில் எங்கும் பிரளய காலம் போல், கருமேகங்கள் சூழ்ந்து கொண்டு பெரிய புயற்காற்றும், கண்ணைப்பறிக்

கும் மின்னலொளியும், சகிக்கமுடியாத பயங்கரமான இடியும், உண்டாகி, யானை துதிக்கை போன்ற ஜலதாரையுடன் கூடிய் மாரியானது எங்கும் இடைவிடாமற் பொழியும் பொழுது, அவ் வனத்திலுள்ள சிங்கம், புலி, கரடி முதலிய மிருகங்கள் யாவும் இருப்பிடமின்றி மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டு, கண்டவிடங் களில் ஓட ஆரம்பித்தன. பெருங்காற்றால் வனத்திலுள்ள பல மரங்களின் கிளைகளும் மரங்களும் முறிபட்டு விழுந்தன. வேரு டன் பூமியில் தள்ளப்பட்டபடியால், அவைகளிலிருந்த விலங் கினங்கள் யாவும் கரைந்து கொண்டு ஆகாயத்திற் கிளம்பிச் சுற் றின. அக் காற்றையும் மழையையும், ஸகிக்கமாட்டாமல் சரீரம் குன்றி பூமியில் விழுந்தன சில. இத்தகைய ஆபத்துக் காலத்தி லும் இந்த பாபாத்மாவான வேடன் குளிரால் நடுக்கமுற்ற சரீ ரத்துடன் நிற்காமலே செல்லும் பொழுது, மார்க்கத்தில் சீத பாதையால் கஷ்டப் பட்டுக்கொண்டு அவனியில் கிடந்த பெண் புறுவை இவ்வாபத்துக் காலத்திலும் பிராணி வதத்தில் பயத் தையடையாமல் அப் பாபி அப் புறுவை யெடுத்துத் தன் கூட் டிற்குள் போட்டுக் கொண்டு மறுபடியும் செல்லுங்கால், பல பக்ஷிகளுக்கு வாஸஸ்தானமாயும் சிறந்த கிளைகளுடன் ஆகாயத் தை யளாவி நிற்கும் ஓர் விருக்ஷத்தை கண்ணுற்றான். அச் சம யம் மழையும் ஓய்ந்தது. மேகங்களும் விலகி, வானமும் நிர்மல மாய் விளங்கிற்று. ஆயினும் கதிரவன் மேற்றிசையில் மறைந்து விட்டமையின், இருள் சூழ்ந்து கொண்டது. அதிக தூரத்திலி ருக்கும் தன்னில்லம் செல்ல வியலாதெனக் கருதி, எதிரே தோன்றிய விருக்ஷத்தினடியிலேயே அன்றிரவைக் கழித்து விடலாமென்றெண்ணி, அம் மரத்தினருகில் வந்தான்.

साञ्जलिः प्रणतिं कृत्वा वाक्यमाह वनस्पतिम् ।
शरणं यामि यान्यस्मिन् दैवतानीति भारत ॥
स शिलायां शिरः कृत्वा पर्णान्यास्तीर्य भूतले ।
दुःखेन महताविष्टस्ततस्सुष्वाप पक्षिहा ॥

பாதவம்சத்திலுதித்தஹே! தர்மபுத்திரரே கேளும். அங்கு வந்த வுடன் அந்த வனஸ்பதியைப் பார்த்து, அஞ்சலி பந்தத்துடன் நமஸ்கரித்து, இந்த விருக்ஷத்தில் விளங்கும் சகல தேவதைகளை யும் நான் சரணமடைகிறேன் என்று சொல்லித் தரைமீது இலை களைப்பரப்பி, அங்கிருந்த ஓர் சிலைமேல் தன் சிரஸை வைத்துக் கொண்டு, அதிக கஷ்டத்துடன் அவ் வேடன் நித்திரை செய் தான். அவ் விருக்ஷத்தின் கிளையில் தன் நண்பர்களோடு கூடிய பல வர்ணங்களால் விளங்கும், கேசங்களையுடைய ஓர் பறவை காலையில் ஆகாரம் சம்பாதிக்க வேண்டி வெளியிற் சென்ற தன் இல்லாளின் வருகையைக் காணாது, மனந்தளர்ந்து, அவளுடைய நற்குணங்களை யெல்லாம் தன்னியற்கை அன்பினால் கூறி, அடி யில் வருமாறு வியசனித்தது.

(தொடரும்)

மறு பிறப்பு.

௩-வது ஜீவனுக்கு மூன்றாவது மார்க்கம் உண்டு.

(௬௫௩-வது பக்கத்தொடர்ச்சி.)

இங்கு ஜீவனுக்கு சாஸ்திரக்காரர் இரண்டு மார்க்கத்தைத் தான் சொல்லி நிறுத்தினர். பிறகு சாந்தோக்யத்தில் பஞ்சாக் கினி வித்தையில், ஓர் ஆசங்கை இவ்விதமேற்பட்டது. அதா வது, இவ்விதம் இங்கிருந்து எல்லோரும் சந்திர மண்டலமே செல்வதால் ஏன் அந்த லோகம் நிரம்புகிறதில்லை? என்ற இதற்கு ஸமாதானம் அதே உபநிடதமே. இரண்டு வழி மட்டிலுமில்லை. சாகிறது பிறக்கிறது என்று ஒரு வழி மூன்றாவது இருக்கிறது. அதிற் செல்பவரநேகர். அதனால் இச் சந்திரமண்டலம் நிரம்பு கிறதில்லை யென்று பதிற் கூறிற்று. ஆகவே, பிறப்பதும் சாவ துமே கதி யென்று ஏற்பட்ட மிருகம், பக்ஷி அல்ப ஜந்துக்கள் போல் மத வாஸனையற்று கர்மாவைக் கொஞ்சமேனும் வேத சாஸ்திரங்களிற் கூறப் பட்டவாறு அனுஷ்டியாமல் பெண்டு பிள்ளைகளும் தானுமே பிரபஞ்சமென்றும், தங்களது வயிற்றை

நிரப்புவதும் எவ்விதமேனும் பணத்தை சம்பாதிப்பதுமே பரம புருஷார்த்த மென்றும், எண்ணியிருப்பவர்களுக்கும் மூன்றுவது மார்க்கமென்றேற்பட்டது. இப்படிக் கெட்டுப் போகும், மனிதனைப் பார்த்துத்தான் நமது பரமாசார்யாள்

अपि मानुष्यकं लब्ध्वा भवन्ति ज्ञानिनो न ये ।
पशुतैव वरं तेषां प्रत्यवायाप्रवर्तनात् ॥

மனுஷ்ய ஜன்மாவை அடைந்தும், எவர் ஞானமுள்ளவர்களாய் ஆகிறார்களில்லையோ, அவர்களுக்குப் பசு ஜன்மம் கிடைத்திருந்தால், மேன்மையுண்டு. ஏனெனில் பாபமில்லாததால் அல்லது தடங்கலில்லாததால் என்றார். இதன் கருத்து இது:- மனிதனுப்ப் பிறந்தால் தான் சாஸ்திரம் அவனைப் பார்த்து, "இதைச் செய், இப்படிச் செய்தால் நீ க்ஷேமத்தை அடைந்து கடைசியிற் புண்யலோகம் பெறுவாய். இதைச் செய்யாதே. அப்படி மீறி நீ செய்தால், உனக்குக் கஷ்டமேற்படுவதுடன், நரகலோகமும் கிடைக்கும்" என்றும், தடுக்கிறது. மனிதனைத் தவிரமற்ற ஜாதிகளுக்கு செய், செய்யாதே என்று சாஸ்திரம் பிரவர்த்திக்கவில்லை. ஆகையால் இவன் பசு ஜன்ம மெடுப்பது நலமென்றார். பசு முதலிய ஜன்மம் இவனிலும் மேலானதென்பதை இங்கு நன்கு கவனிக்கலாம்- பகுத்தறிவில்லாத இப் பசுவானது தான் முன் எப்போதோ எடுத்த மனித ஜன்மத்திலேற்பட்ட அபாரமான தீய பாபச் செயலால் அநேக திர்யக் யோனிகளிற் பிறக்கும்படி யமனது கோர்ட்டில் அடைந்த தண்டனையை இப் புவியில் வந்து அனுபவிக்க வந்தபடியாலும், புண்யம் பாபமென்ற பகுத்தறிவு ஏற்படாத ஜன்மமானதாலும், யமனிட்ட தண்டனைப்படி தனக்கேற்பட்ட பசு முதலிய ஜன்மங்களைக் கழித்துக் கொண்டே போகும். இம்மனிதனிறந்தவுடன் தான் இவனுக்கு விசாரணையும் தண்டனையும் சகிக்க முடியாதது பற்றி, மனித ஜன்மம் இவனுக்குக் கிடைக்காமல் பசு ஜன்மம் கிடைப்பது நலமென்றார். ஆனால் மனிதனுய் இருந்து அங்கு அதிக பாபம் செய்தாலும், அவன் மனிதனுகவே பிறப்பானென்றும், அங்கு

தான் அவன் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்றும் மற்ற ஜன்மங்களில் அனுபவிப்ப தென்பது தெரியாதென்றும், தியஸாபிகல் மதத்தார் கூறுகின்றனரே எனில் அவர்கள் கூறுவ தற்கு ஸமாதானம் அவர்கள் சொல்வது அவர்கள் மனதிற்கு மட்டிலும் தான் திருப்தியைக் கொடுக்குமோ இல்லையோ தெரியாது. வேத சாஸ்திரானு ஸாரிகளான நாம் அங்கு செவி சாய்த்திடத் தயாராயுமில்லை. ஆயினும் இதற்கு ஸமாதானத்தை விரும்பின், ஏராளமாய் நமது வேதங்களிலும் புராணங்களிலும் காணலாம். கடோபநிடத்திலும், நசிகேதஸிடம் யமன் உபதேசம் செய்தபோது, சொல்வதில் அடிக்கடி என் வசமாகிறான் என்று சொல்கிறார். இங்கு அடிக்கடி என்பதின் ஆனுபூர்வியைப் பார்த்தால், முதலில் மனிதனைப் பற்றித்தான் ஆரம்பித்தாரென்பது தெரியும். அடிக்கடி வரவேண்டிய பூச்சி கொசு முதலிய ஜன்மங்களையும் அதற்கும் கீழ் ஜனனத்தையு மெடுப்பானென்பது தெரிகிறது. ஆகவே மூன்றாவது மார்க்கத்தை அடைகிற ஜீவர்கள் அதிகமாய் இருப்பதால் சந்திரமண்டலம் நிரம்புகிறதில்லை யென்றாயிற்று. ஆனால் எவர் இந்த லோகத்தை விட்டுப் புறப்படுகின்றனரோ, அவர்களெல்லோரும் சந்திரனை அடைகிறார்களென்றும், ஐந்தாவது ஆஹுதியில்தான் புருஷனென்ற பெயரை அடைகிறார்களென்றும் கூறும் உபநிடதங்களுக்கு இது விரோதமாகிறதே யெனில், விரோதமாகாது. ஏனெனில் இங்கிருந்து போகிற எல்லோரும் சந்திரனை அடைகிறார்களென்ற விடத்திலுள்ள எல்லோரும் என்ற பதத்திற்கு எல்லா ஜீவர்களும் என்றர்த்தமல்ல. மற்று சந்திரலோகம் போகத்தக்க அதிகாரம் பெற்றவர்கள் தான் எல்லோரும் என்பதற்கு அர்த்தமென்று பாஷ்யகாரர் ஏற்றுக்கொண்டனர். அவ்விதமே பிரமாணங்களையும் விஸ்தரித்தனர். பிறகு ஐந்தாவது ஆஹுதியில் ஹோமம் செய்யப்பட்ட ஜலம் புருஷனென்ற பெயரை அடைகிறதென்று சொன்னதால், ஸ்வர்க்கம் போய்த்தான் ஆக வேண்டுமென்று கேட்பதற்கு இவ்விதம் ஸமாதானம். ஐந்தாவது ஆஹுதியில் ஜலம் புருஷ சப்தத்தை அடைகிறதென்றத

ருல், மனிதனுய்ப் பிறப்பதைத்தான் குறிக்கிறது. புருஷ சப்தம் மனிதனிடத்தில் தான் பிரயோகிக்கப் படுகிறது. மற்றும் இங்கு ஐந்தாவது ஆஹுதியில் புருஷன் என்ற பெயரை அடைகிருன் என்று விதித்த வாக்கியம் நாலாவது மூன்ருவதில் ஜன்மமடைய முடியாதென்றும், நிஷேதித்ததா? அப்படி நிஷேதித்ததாய் இந்த வாக்கியத்திற்கு அர்த்தம் சொல்வதென்ருல் இதே வாக்கியம் ஐந்தாவது ஆஹுதியில் ஜலம் புருஷனென்ற பெயரை அடைகிறதென்றும், மற்ற ஆஹுதிகளில் இல்லையென்றும், இரண்டு அர்த்தத்தை ஒரே வாக்கியம் சொல்வதாய்க் கற்பனை செய்வது சாஸ்திரகோஷ்டி சம்பிரதாயமில்லை. ஆகையால் ஐந்தாவது ஆஹுதியில் புருஷனென்ற பெயரை அடைகிறது என்பது மற்ற ஆஹுதியிலும் ஜன்மத்தை அடைவதைத்தடுக்காது. இதைக் கீழ் வரும் விஷயத்தாலறிக. துரோணுசார்யர், திருஷ்டத்யுமனன், ஸீதை, திரௌபதி, இவர்கள் யோனிப் பிறப்புள்ளவர்களல்ல. இதிற் சிலர் ஸ்திரீ என்ற ஆஹுதியில்லாதவர்கள். சிலர் ஸ்திரீ புருஷர் என்ற இரண்டு ஆஹுதி யற்றவர்கள். ஆகவே ஸாமான்யமாய் ஐந்தாவது ஆஹுதியில் மனிதனென்கிருனென்று சொன்னதாய் அர்த்தம் கொள்ள வேண்டுமேயொழிய, ஐந்தாவது ஆஹுதியில் தான் மனுஷ்யனென்ருவானென்றும், மற்றதில் ஆகமாட்டானென்றும் அர்த்தம் கொள்வதற்கு நியாயமே கிடையாது. கொக்கு பிறப்பதும் புருஷ ஸம்பந்தமில்லாமலே கருத்தரிப்பதாய் லோக வார்த்தை என்று பரமாசார்யாள் கூறுகின்றனர். மற்றும் தேள் புழு முதலிய ஜந்துக்கள் மனிதனது வியர்வை ஜலத்தின் வாடையாலும் காற்றில்லாத அடைசலில் உண்டாகும் விஷக்காற்ருலும் உண்டாகின்றன. உடனே அழிகின்றன. ஆகவே மூன்ருவது மார்க்கமென்ரென்றிற் செல்கிறவர்கள் உடனுக்குடன் பிறப்பது மழிவதுமாய் இருக்கிருர்கள். இதனுல்தான் இந்த ஸ்வாக்கலோகம் நிரம்புகிற தில்லை யென்று முற்கூறிய விஷயம் புலப்பட்டது. இனி இவ்விதம் மூன்ருவது மார்க்கத்திற் செல்கிறவர்களின் தண்டனையையும் அவர்கள் படும் துக்கத்தையும் பற்றி இங்கு விரிப்பதென்ருல், இது பெரிய புராணமாய்விடும். ஆதல்பற்றி

இது விஷயத்தை ஆஸ்திகர்கள் கருடபுராணத்தை வாசித்திருப்பார்களானதால் மற்றவர்களும் அவர்களிடமிருந்தே தெரிந்து கொள்ளலாமாதல் பற்றி கர்மிகளது தூமாதி மார்க்கத்தைப் பற்றியே கவனிப்பாம்.

---

7 வது. தூமாதி மார்க்க ஸ்வரூபம்.

இக் கர்மிகளது ஜீவன் இச் சரீரத்தை விட்டுப் பிரிந்ததும் அவனது புத்திரர்களால் உத்தரக் கிரியை சரிவர நடத்தப் பெற்றுப் பிறகு ஜலமயமாய் தூமாதி மார்க்கத்தை அடைகிறுனென்ருயிற்று. ஆனுல் பிருகுதாரண்யகோபனிடத்தில் இறந்த மனிதனது வாக்கானது அக்னியை அடைகிறது. பிராணன் வாயுவை அடைகிறது. என்று ஒவ்வொரு இந்திரியமும் ஒவ்வொரு தேவனே அடைந்து விடுவதாய்ச் சொல்லியிருக்கிறதே. அந்த சுருதி வாக்கியத்தின்படி பிராணன் இந்திரிய மெல்லாம் சேர்ந்து போவதாய்த் தெரியவில்லையே. இதற்கு என்ன சமாதான மென்ருல் கூறுவாம். இங்கு சொன்னபடி பிராணன் வாக்கு இதெல்லாம் அப்படியே ஆங்காங்குபோய்விடுகிறதென்ற அர்த்தமில்லே. அததற்கு ஏற்பட்ட அதிஷ்டான தேவதை அங்கங்கு போய்ச் சேர்ந்து விடுகின்றன வென்று அர்த்தம். அதனுல் அந்த யாதனு சரீரத்திலுள்ள வாக்கு முதலியவைகளைக் கொண்டு தன் இஷ்டப்படி யெல்லாம் வியவகாரம் செய்யமுடியாமல், மரம் முதலிய ஸ்தாவரங்களிலிருக்கும் ஜீவர்கள் போல் சுகதுக்கானுபவ முள்ளவனுப் போவானென்றுதான் அர்த்தம். ஏன் இவ்விதம் கூறவேண்டுமெனில், இவ்விதம் கூருவிடில் மேற்கூறிய சுருதியில் தேகத்திலுள்ள ரோமங்கள் ஒஷதிகளே அடைந்துவிடுகின்றன. தலே மயிர்கள் வனஸ்பதிகளே அடைகின்றன. என்று மேலே இருக்கிறது. அப்படி வாக்கு முதலியவை அந்தந்த விடத்திற் போய்விடுவது போல், இறந்தவனுடைய மயிர்களும் போகக் காணவில்லே, அவனிடமே இருக்கின்றன' ஆகை

யால் முற்கூறிய அர்த்தமே சரி. ஆகவே இவ்விதம் கிளம்பின யாதனா சரீரம் நேரேயே சந்திர லோகம் போய்ச் சேருகிறதா வென்றால், இல்லை. இதனால் தான் யான் முன்னமே புகை போவது போற்போகு மென்றேன். புகை போவது ஏறியும் இறங்கியும் செல்லும். அது போல ஆகாயத்திற் பறக்கும் இச் சீவனும் பகல் முழுமையும் சூர்ய கிரணங்களால் உயர இழுக்கப்பட்டும், இரவில் இறங்கியும் செல்லும். ஆனால் பகலில் எவ்வளவு ஏறுகிறதோ, அம்மட்டிற்குக் குறைவாய்த்தான்கீழே இறங்கும். இதை ஒரு திருஷ்டாந்தத்தால் தெரிந்து கொள்ளலாம். நாம் இலேசான ஒரு பஞ்சைக் காற்றில் விட்டால் அது அதிக வேகமாய்க் காற்றால் உயரக் கிளம்பும். காற்று நின்றால் அப் பஞ்சு எவ்வளவு வேகமாய்க் கிளம்பியதோ, அவ்வளவு வேகத்தில் 16 ல் ஒரு பங்குகூட இறங்காது. அதுபோல் யாதனா சரீரத்திற்கு பூவுலகை விட்டு ஓடுவதுதான் இயற்கை. அதற்கனுகூலமான சூர்யகிரண மிருக்கும்போது வேகமாய்ச் செல்லும். இல்லாத இரவு வேளையில் மெள்ள மெள்ள இறங்கும். இவ்விதம் செல்லும் இச் சீவன் தன் பாபத்தை இங்கனுபவிப்பான். அதாவது அவனது பாபத்திற் கனுகுணமான நரகம் முதலிய அண்டங்களில் விழுவான். ஆனால் இவன் போகும் வழியில் நரக லோகங்களென்ற அண்டங்களிருக்கின்றனவா? அந்தலோகத்து வழி இவன் செல்வானா? அல்லது இவனை யாராவது அந்த லோகத்திற் கொண்டு போய்ச் சேர்ப்பார்களா? இந்த ஜீவனுக்கோ கன்மமுதலிய இந்திரியங்களிருந்தும் இல்லாதது போற்றானே. அப்படியிருக்க ஜீவர்கள் தத்தம் பாபத்திற்குத் தகுந்த லோகம் இதுதானென்றெப்படித் தெரிந்துகொண்டு அதிலிறங்குவார்கள்? யாராவது கூடப்போய் சேர்க்கவேண்டுமேயொழிய வேறு வகையில்லை. அப்படி அச் சீவர்களுடன் யாராவது போவதாய் ஓரிடத்திலும் சொல்லவில்லையே என்று கேட்டால், நியாயம் தான். இதை விசாரிக்க வேண்டியதவசியமே. இங்கு எனது பரமாசார்யரவர்கள் உபன்யஸிக்கும்போது, சொன்ன என் புத்தியிற் பட்ட விஷயத்தைச் சொல்கிறேன். இங்கிருந்து செல்லும் ஜீவனது யாத்திரையில் அவன் பின்பற்றிச் செல்லும் புண்ய பாப கன்மம் ஒன்றுண்டு என்று முன் கூறினேன். அக்

கன்மம் அச்சீவனிடத்தில் எப்படி இருக்குமென்றால், தேய்த்து வைத்த பாத்திரத்தில் துரு அல்லது அழுக்கேறினாற் போலிருக்கும். பாத்திரத்திலேறிய அழுக்கும் பலவகை உண்டு. ஒன்று புளியால் விலகும். ஒன்று சாம்பலால் விலகும். ஒன்று நெருப்புப் புடத்தால் விலகும். ஒன்று சாமான்யமாய்க் கையினாலோ வஸ்திரத்தாலோ துடைத்தாலே விலகிவிடும். அது போல் இச்சீவனிடத்திலும் பல அழுக்கென்ற பாபகன்மம் பற்றியிருக்கும். அதாவது பறக்கும் பஞ்சில் ஒட்டியிருக்கும் சிறு சிறு கருப்புகள் போலிருக்குமென்று வைத்துக் கொள்வோம். ஆகவே அப்பஞ்சிலிருக்கும் கருப்புகள் எப்படிப் பறக்கும் பஞ்சுக்கும் தடங்கல் செய்யுமளவு கனமுள்ளதல்லவோ, அது போல் தூமாதிமார்க்கத்திற் செல்லும் ஜீவர்களுடைய கதியை ஒருபோதும் தடுக்காது. அழுக்குகள் நிறைந்த கழிபட்ட பஞ்சு எவ்விதம் கொஞ்சமும் உயரக்கிளம்பாமல் மண்கட்டி போல் பூமியிலேயே கிடக்குமோ, அதுபோல் மூன்றுவது மார்க்கமாய் யமலோகம் செல்லும் பாபத் துருப்பிடித்த ஜீவன் உயரக் கிளம்பாது. அது இழுபட்டுச்சென்றும், திரும்பியும், ஓர் நரகத்திற் போய்விழுந்து அதில் அநேகஆயிரம் வருடம் உழன்று பழயபடி அதை விட்டுக் கிளம்பியவுடன், இன்னொரு நரகத்திலகப்படுவதும் இவ்விதம் கணக்கில்லாத வருடம் நரகத்திற் திண்டாடிப்பிறகு புற் பூண்டு செடி கொடிகளாய்ப் பிறந்து, உழலுவானென்பதைப் பற்றி எழுதும்போதே கைநடுக்கமும் மனப் பதட்டமுமுண்டாகிறது பற்றி, இதைத் தொலைத்து விட்டு நாம் தூமாதிமார்க்கத்தைப் பார்ப்போம். இவ்விதம் தூமாதிமார்க்கத்தில் புண்யபாபகன்மத்தோடு போகும் இச் சீவனுக்கு துணை ஒருவருமில்லை. வழிப்போக்கன் வழிநடக்கும்போது பக்கத்தில் கிராமத்தைக் கண்டவுடன் ஒதுங்குவதுபோல் அங்கிருக்கும் லோகங்களைக் கண்டு இவனாய் ஒதுங்குவதுமில்லை. அப்படி ஒதுங்க இவனுக்கு புத்தியுமில்லை. கண் காலுமில்லை. கேவலம் சூரிய கிரணத்தால் மட்டிலும் ஸ்வதந்திர மில்லாமற் செல்கிறான். அங்கு ஸ்திரமான லோகங்களுமில்லை. மற்று எவ்விதம் அதை அடைகிறானென்றால் இச் சீவன் அங்கு செல்கிறதில்லை. நாக மென்னும் அந்த அண்டங்கள் அங்கங்கு ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும். அது இருள்

நிறைந்தது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான பாபரூபமாய் இருக்கும். அவ்விதம் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் அப் பாப ரூபமான நரகமென்ற அண்டம் இங்கிருந்து செல்லும் ஜீவர்க ளிடமிருக்கும் தன் ஸம்பந்தமான பாபத்தைப் பற்றி இழுத்துக் கொள்ளும், இதை ஆகர்ஷண சக்தி யென்று சொல்வார்கள்,

இதை இவ்வுதாரணத்தால் தெளிவு படுத்தலாம். அநேக ஜனங்கள் பொதுவாய்க் கூடியுள்ள விடத்தில் ஒரு ஸ்னேகிதன் அயலூரிலிருந்து வந்தால் எல்லோரும் எழுந்திருக்காமலிருக் கும்போது அவனுக்கு ஸொந்தமான ஒருவன் மட்டிலும் ஆவ லுடன் எழுந்து வந்து அவனிடமுள்ள பிரியத்திற்குத் தக்கப்படி கட்டிக்கொண்டு எவ்விதம் ஸல்லாபம் செய்வானே, மற்றவர்கள் எப்படி உதாஸீனமாய் இருப்பார்களோ, ஓர் ஊசிக் காந்தமா னது பக்கத்திலிருக்கும் தங்கம் வெள்ளி முதலிய உத்தம உலோகங்களை விட்டு விட்டுத்தன் குணமுள்ள இரும்பை மட்டி லும் எப்படி இழுத்துக் கொள்ளுமோ, மற்ற உலோகங்களை ஏரி ட்டுப் பாராதோ, அதுபோல் என்று வைத்துக் கொள்ளலாம். ஆகவே இம்மாதிரி அந்த ஜீவன் அவ்விருண்ட வண்டத்தினுட் பிரவேசித்து அங்குசூர்யகிரணம் தன்மேற் படாததாலும், காற் றில்லாததாலும் அச்சமயம் புத்திரன் கொடுக்கும் பிண்டமும் தனக்குக் கிடைக்காததால் பசி தாகத்தினும் வருந்துவது டன் தன் தேகத்திலிருக்கும் பாபத்தை அது உறிவதற்கு ஆரம் பிக்கும். அவ்விதம் ஆரம்பிக்கும்போது அவனுக்கு உண்டாகும் வேதனையை என்னென்று சொல்லமுடியும். இதையும் ஓர் உதா ரணத்தாலறிவோம். நமது வீட்டின் உள்ளே ஓர்மூலையில் இருக் கும் ஓர் தாமரப் பாத்திரம் துருப்பிடித்தால் அதை முன்போற் செய்ய புளியினுலும் செங்கற் பொடியாலும் தேய்க்கிறோம். அப்போது அந்த செம்பிற்கு அறிவு என்ற அம்சமிருந்ததானல் அது சந்தோஷப்படுமா? நமது வஸ்திரத்திலேறிய வழுக்கை விலக்க வண்ணன்செய்யும் ஸம்ஸ்காரத்தை,வஸ்திரம் அறிவுள்ள தாய் இருந்தால் பொறுக்குமா? அதுபோல் நமது பாபத்தை இருண்ட நரகமென்ற அண்டத்தில் சோதிக்கும்போது ஜீவன் படும் பாட்டை என்னென்று வர்ணிக்கமுடியும், இவ்விதம் அவ் வண்டத்திற்குரிய பாபம் தேயத் தேய ஜீவன் மேற்கிளம்பிக்

கொண்டே வரும். முழுமையும் தீரும் சமயத்தில் சூர்யகிரணம் பட்டவுடன் உயர இழுக்கப்படும். மறுபடியும் கிரமமாய்ச் சென்று கொண்டிருக்கும்போது இன்னொரு அண்டத்தினல் இழுக்கப்படலாம். இவ்விதம் போகும் ஜீவனது பாபம் இன்னும் எத்தனைவகை இருக்குமோ, அத்தகைய நரகமண்டலங்களா லிழுக்கப் படலாம். அங்கு ஒவ்வொன்றிலும் எத்தனை வருடகா லம் வஸிப்பானென்பதை நிச்சயித்துச் சொல்ல சாஸ்திரக்கார ராலும் முடியாது. கடைசியாக, தேவனுலும் முடியாதெனலாம். ஏனெனில் அவனவனுக்கு எவ்வளவு பாபமுண்டோ அது யாரு க்குத்தான் தெரியும். இவ்விதம் அண்டங்களாலிழுக்கப் பட்டுத் தேய்த்துக் கறைக்கப் பட்ட பாபமூட்டைகளைக் கழிக்க ஜீவன் கடைசியாய்ச் சந்திரமண்டலத்தை அடைவான். அதுதான் ஸ்வர்க்கலோகமெனப்படும். ஆனல் தூமாதி மார்க்கத்திற் செல் லும் கர்மிகளுக்கும் இவ்வளவு தொந்திரவு உண்டென்றல் சாந் தோக்யத்தில் 10 வது அத்தியாயத்தில் இஷ்டாபூர்த்தம் முத லிய நற்கன்மம் செய்தவர்கள் இறந்தும் முதலில் தூமத்தையும் அதினின்று ராத்திரி, அங்கிருந்து அபரபக்ஷம், அதினின்றும் தக்ஷிணயன மாஸங்கள், அவைகளினின்று பிதிருலோகம், அதி னின்றும் ஆகாயம், அதினின்றும் சந்திரனையும் அடைந்து விடு கிறர்கள் என்ற சுருதிக்கு விரோதமாகாதா வெனிலாகாது. ஏனெனில் இது சுத்த கர்மிகளான புண்யாத்மாக்கள் செல்லும் மார்க்கம். புண்யம் பாபம்செய்தவர்களும் தூமாதிமார்க்கத்தை அடைந்தபோதிலும் பாபக்ஷயத்திற்காக மட்டிலும் ஆங்காங்கு ஒதுங்கிப் பிறகு முற்கூறிய விடங்களிற் தங்கியும்தான் போவார் கள். இவ்விதம் ஸ்வர்க்கலோகமென்ற சந்திரலோகத்தை அடை ந்து அங்கு புண்யமிருக்குமளவும் கேவல சுகத்தையே அனுப வித்துக்கொண்டு வெகுகாலமோ கொஞ்ச காலமோ வஸிப்பார் கள். இங்கும் வெகுகாலம் கொஞ்சகால மென்பதின் நிச்சயத் தைச் செய்ய அவர்களிடமிருக்கும் புண்ய கன்மாவின் பலாப லத்தைப் பொருத்தது தான். இனி இவ்விஷயத்திலொரு சந் தேகமுண்டாகிறது.

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

தற்காலப்பிரமதப் பாடசாலைகட்கு நம் பாலர்களை யனுப்புவதனாலேற்படும் பயன்.

ஆரியசிகாமணிகாள்!

விரிநீருடுத்த வியனுலகின் கண் உள்ள பலகண்டங்களுள்ளும் நம் பரதகண்டமே மிகுதியுஞ்சிறப்புற்றோங்கியதற்குக் காரணம் யாதுஎன்று நாம் முதன்முதலாக ஆராயப்புகுந்தால் நமதுதொழுதுலத்தில் ஜனித்தவர்களுடையமணிநாநடமிடு நல்லுரையினும் தொல் புகழாளராகிய நம் மகரிஷிகளுடைய தொல்லுரையாகிய நல்லுரையினுங் கூறப்பட்டுள்ள பற்பல வர்ணம் ஆசிரம் இவைகளின் தருமநெறி நிலைகுலையாது நிற்றலேயாகுமென்பது கொஞ்சமும் ஐயப்பாடின்றி யாவரும் அறியக் கிடந்ததே. இஃதன்றி வேறு அநந்யஸாதாரணமான காரணம் யாதுகூறமுடியும். இஃது ஒன்றே மேனாட்டார் முதலிய புறச்சமயத்தாருக்கன்றி நம் பாரதவறிஞர்க்கு மாத்திரமின்றியமையாது கிடைத்ததோர் அரிய பெரிய பேறாகும். ஆதலால் நாம் நன்கு புறச்சமயநூல்களையும் புறச்சமயத்தார் பாடகசாலையிற்சென்று படிப்பதையும் முக்கியமாய்த்தவிர்க்க வேண்டுவதிருக்க, அதனைவிட்டு நம்பாரத அறிஞர்களே செல்வர்களின் தாய் தந்தையரே அருமையாக இம்மை மறுமையிருவிதப்பயனையும் பயக்கும் புதல்வரைப்பெற்று, அவர்களைப்பரிபாலித்துக் கல்வி கற்குங்காலம் வந்தவுடன் ஏராளமான திரவியத்தையுஞ்செலவிட்டு, மேனாட்டாருடைய பாடசாலைகளிற்கொண்டு சேர்த்து மேனாட்டாருடைய கல்வியைக் கற்கச்செய்ய, அவர்களும் நாளடைவிலே அவர்களைப்போலத்தம் மதத்தின் கொள்கைகளையறியாதவர்களாகி, புறச்சமயத்திலேயே மூழ்கி அவர்களைப்போலவே தலைமயிர் முதலியனவற்றை கத்தரித்துக்கொண்டு நியமமென்பதையே யறியாதவர்களாகி, நம்மதக்கோட்பாட்டினை எடுத்து யாராகினும் ஒருவர் சொல்வதைக்கேட்டால் ஆக்ரகங் கொள்வதையும், நாம் நேரிலேயே பார்த்து தெரிந்துகொள்கிறோம் என்பதில் ஐயமேயில்லை. இப்படி இருக்கச்சிலர் இவ்வாறு நம் குழந்தைகள் பலவாறாக மேனாட்டார் பாடசாலையிற்சென்று படிப்பதனாற் கெட்டுப்போகிறார்கள் என்பதாக யாராகிலும் சொல்லக்கேட்டால், மிகுதியுங்கோபமுடையாராய் மேனாட்டார் பாடசாலையிற் சேர்ந்து கல்விகற்றதினால் எவ்வாறு அவர்கள் கொள்கையை இவர்கள் கைக்கொள்வார்கள் என்று மிகவிமரிசையாய்க் கேட்கும்போதுதான் மிகுதியுமாச்சர்யமுண்டாகிறது. அவர்கள் நம்முடைய நூல்களையே கற்காமற்போனபடியினாற்றான் நமது மொய்யா மொழிப்புலவராகிய திருவள்ளுவநாயனார் கூறிய குறள்வாக்கியமுமவர்களுக்கறிய முடியாது போயிற்றெனவே நான் நினைக்கிறேன். குறள்—

நிலத்தியல் பானீர் திரிந்தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

மேலும், பார்ப்பனனுகப்பிறந்து நிர்ப்பந்தம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அதனையுந் திருக்குறளாசிரியர் பார்ப்பனனுக்கு ஒழுக்கம் முக்கிய மெனக் கூறுவாராகி—

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கங் குன்றக்கெடும்.

எனக்கூறுகிறார். ஆதலால் பார்ப்பானுக்கு ஒழுக்கந்தான் அவசியமெனத் தெரிகிறது. இஃதிவ்வாறிருக்க, நம் பாரத அறிஞர்களாகிப் பார்ப்பனர் பலர்

"எழு பிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்
பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற.

என்று கூறப்பட்ட முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென் புலத்தார் கடன் தங்களைப் பெற்றதனுனும் என்று கூறியபடி பிதிருக்கடன் தீர்த்துவைக்கும்படியான அருமைப் புதல்வரைப் பெற்று வளர்த்து அதன்பின்னவர்களை

"தந்தை மகற்காற்று நன்றிய வையத்து
முந்தியிருப்பச் செயல்,

என்று கூறியபடி தன்மதக்கோட்பாடுகளும் தன்னுடைய ஒழுக்கவழக்கங்களும் தெரிந்துகொள்ளாமற் புறச்சமயத்தாரின் கொள்கையும் அவர் தம்மதத்தின்கண் முதன்மை பெற்றேங்கியபின்னர் இவனது மதத்தின் கோட்பாடுகளையெடுத்துரைப்பாரை நிந்திப்பதும் இவர்களுக்கு விரோதமான கட்சியினின்று சிரார்த்தமுதலியென எதற்காகச்செய்வது? நாம் மணியார்டர் அனுப்பினுல் ரசீது ஆதாரம் கிடைப்பதுபோல் இங்கிருக்கிற பிராம்மணர்கள் சாப்பிட்டதனுல் பிதிருக்கள் திருப்தியடைந்ததற்கு ஏதாவது நம்பும்படியான ஆதாரமென்ன இருக்கிறது? எனப்பலவாருக விதண்டாவாதஞ்செய்யும் படியான புத்தி, பிள்ளைகளுக்கு உண்டாகச்செய்வது நாம் நம்முடைய ஒழுக்கமுறைப்படி உபநயனஞ்செய்வித்து அத்தியனஞ்செய்வித்து சாஸ்திரங்களைக்கற்பித்துக் கொடுக்காமல் புரச்மசயத்தார் பாடசாலைகட்கு அனுப்பித்த குற்றத்தைத்தவிர வேறு யாது இவ்விஷயத்திற் காரணமாகக்கூடும்.

ஆதலால் இனிமேலாகிலும் நமதுபாரத அறிஞர்கள் யாவரும் தங்கள் தங்கள் அருமைப்புதல்வர்களைப் புறச்சமயத்தார் கல்விச்சாலைகட்கு அனுப்பிக்காமல் தங்கட்கு ஏற்பட்ட வரு

ணத்திற்கேற்பட்டபடி புதல்வர்களுக்குத் தகுந்தவயது வந்தவுடன் ஜம்புகேச்வரத்தில் ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதிகளான மகாஸ்வாமிகளா லேற்படுத்தப்பட்டது போன்றவித்யாலயங்களிற் கொண்டுசேர்த்து அவர்களுடைய ஒழுக்கத்தினின்று கொஞ்சமும் வழுவாது ஒழுகிக்கொண்டு வேதாத்தியனம் முதலியன செய்து, பின்னர் காவ்யசாஸ்திரங்களையும் பயின்று, பின்னர் கார்ஹஸ்தியாதி யாசிரமங்களிலுமிருந்து வழுவாது அனுஷ்டித்து வருவார்களானால் மிகுதியும் க்ஷேமதனையடைவார்கள் என்பதில் கொஞ்சமுமையப்பாடிலது. ஆதலால் இதுமுதல் அவ்வாறே நம்பாரத மக்களுடைய குழந்தைகளும் கல்விகற்று சுகமடையவேணுமென்று ஸ்ரீ மகாகவிசக்ரவர்த்தியாகிய காளிதாஸர் முதலியவர்கட்கும் வாக்விலாஸத்தையும் புகழையுந்தந்தருளிய ஸ்ரீ லலிதாம்பிகையை மிகுதியும் பிரார்த்திக்கிறேன். T. Y. சிவம்.

மதுரை.

கும்பகோணம் ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள்

ஸ்ரீ மடம் கைங்கர்ய ஸபா.

நமது நாட்டில் தெய்வபக்தியும் குருபக்தியும் சிறப்புற்றோங்கி செழித்துவந்து இப்பால் மிகவும் க்ஷீணதசையை அடைந்திருப்பது நமது நாட்டின் க்ஷீணதசைக்குக் காரணமாதலால் நமது இந்து மதத்தைச்சேர்ந்த சிஷ்யகோடிகள் எல்லாருடைய க்ஷேமத்தை உத்தேசித்து ஆதிசங்கரரே புனரவதாரம் செய்திருக்கிறாரோவென்று நினைக்கும்படி பீடாதிபதியாக விளங்கிவரும் நமது ஆசார்யாள் ஆக்ஞையை முன்னிட்டு மடத்திற்கு சேர்ப்பிக்கவேண்டிய அக்ர சம்பாவனை தீபாராதனை காணிக்கை வகையறாக்கள் பலவிதமான காரணங்களால் சரிவர சேர்ப்பிக்கப்படாமல் இருந்துவருவதையும் இன்னும் நம்முடைய மஹோத்தாரணத்தை உத்தேசித்து நம்முடைய கடமைகளை நாம் சரிவரத்தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கவும் கருதி மூன்று மாதங்களுக்கு முன் இந்நகரில் ஒரு பொதுக்கூட்டம் கூடப்பட்டு அந்தக் கூட்டத்தில் பிரும்மஸ்ரீ ராயபுரம் நாராயண சாஸ்திரிகள் அவர்களால் “குரு பக்தி” என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யாசம் செய்யப்பட்டும் பிறகு மேலே கண்ட விஷயங்களை கவனித்து சரிவர நடத்தவேண்டி ஸ்ரீ மடம் கைங்கர்யசபா என்றநாமதேயத்துடன் ஒரு கமிட்டியானது ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நகரானது 6 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு அதில் ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்மன் கோவில் வார்டுக்கு

மகா-ா-ா-ஸ்ரீ பத்மநாப அய்யர் அவர்களும் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவில் வார்டுக்கு மகா-ா-ஸ்ரீ கோ. வெ. நாகராஜய்யர் அவர்களும் ஸ்ரீ ஸௌந்திரராஜப்பெருமாள் கோவில் வார்டுக்கு மகா-ா-ஸ்ரீ ப. லெ. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களும் ஸ்ரீ நடுவர்கோவில் வார்டுக்கு மகா-ா-ஸ்ரீ N. சாம்பசிவ அய்யர் அவர்களும் வெளிப்பாளையம் வார்டுக்கு மகா-ாஸ்ரீ முத்துசாமி அய்யர் மகா-ா-ஸ்ரீ பரமசிவ அய்யர் அவர்களும், ஸ்ரீ காளியம்மன் கோவில் வார்டுக்கு சானிடரி இன்ஸ்பெக்டர் மகா-ா-ஸ்ரீ R. V. கோபால சாஸ்திரிகள் அவர்களும் மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த மெம்பர்களால்மகா-ா-ஸ்ரீ வக்கீல் N. சாம்பசிவஅய்யரவர்கள் சபாவுக்கு காரியதரிசியாகவும் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் செய்த ஏற்பாடுகள் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் திவ்ய ஸன்னிதானத்திற்குத்தெரிவித்துக்கொள்ளப்பட்டும் ஷை மெம்பர்களுக்கு திவ்ய ஸன்னிதானத்திலிருந்து ஸ்ரீமுகங்கள் அனுப்பப்பட்டுமிருக்கிறது. ஒவ்வொரு மாதம் சுக்லபக்ஷ பஞ்சமியன்று ஷை சபா மெம்பர்கள் ஸ்ரீ சட்டநாதர் சன்னதியில்கூடி அந்தந்த மாதங்களில் வசூலான தொகைகளை கார்யதர்சியிடம் சேர்ப்பித்தும் இன்னும் சபாவின் அபிவிருத்திக்கு வேண்டிய விஷயங்களையும் ஆலோசித்தும் வருகிறார்கள். இது விஷயமாக ஸ்ரீ மடத்திலிருந்து அனுப்பப்பட்டு இவ்விடம் விஜயம் செய்திருந்த பிரம்ம ஸ்ரீ V. ராமச்சந்திர அய்யர் அவர்கள் முன் நின்று இந்த சபாஸ்தாபனம் ஆகி நடந்து வரும்படியான ஸ்திதிக்குக் கொண்டுவருவதில் மிகவும் உதவி புரிந்தார்கள். நாகப்பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள நாகூர் சிக்கில் முதலான இடங்களுக்கும் இந்த சபாமெம்பர்கள் போயிருந்து அந்த இடங்களிலும் இதேமாதிரியான சபைகள் ஏற்பாடுசெய்யப்பட்டுமிருக்கிறன்ன. இன்னும் மைத்தஇடங்களிலும்ஆஸ்திகசிகாமணிகள் எல்லோரும் இந்தவிஷயத்தில் சிரத்தையெடுத்து ஏற்பாடு செய்வதுடன் இந்தசபா முன்னுக்கு வரவேண்டியதற்கு வேண்டிய உதவி புரிவார்கள் என்றும்கேட்டுக்கொள்ளப்படுகிறது.

N. சாம்பசிவ அய்யர்

காரியதர்சி, நாகபட்டிணம்.